காவியம்

ஆசிரியர்: சுரதா

(கவிதை வார இதழ்)

சுவடி 1: ஏடு 14 | சென்னை: திருவள்ளுவராண்டு, 1987, மாசி 26 | விலை அணா 1

9—3—56

ஆந்திரர் ஆசை நிறைவேறப் போகிறது!

அமைச்சர் நேரு, ஆந்திர மக்களின்
விசால ஆந்திர விருப்பம் நிறைவேற்ற
இசைவு தந்து இருக்கிறார்; இது, எதைக்
காட்டுகிற தென்றால், கர்ச்சனைப் பிரதமர்
சரணா கதியடைந் திருக்கிறார் என்பதே!

ஆந்திரர்க்கு, விசால ஆந்திரம் ஆனால் நமக்கு?

அடிநாள் தொட்டே அலகாபாத் பண்டிதர்
இதனை அமைத்திடும் எண்ணம் உள்ளவரே!
இருப்பினும் இன்றுதான் தன்அரசு முடிவைத்
திட்ட வட்டமாய்த் தெரிவித் திருக்கிறார்.
இந்த விசால ஆந்திரம்; புதுமா
நிலங்கள் அமைக்கப் படுகின்ற போதே
அமைந்து விடுமென்று அறிவித் துள்ளார்.

இளம்மனைவி இதழ்போல் இனித்திடும் கரும்பு,
தண்டித்தால் அன்றி சாறு தராது!
எள்ளும் அந்த இனத்தில் சேர்ந்ததே

ஆத்திர அமைச்சர் ஆந்திரர் ஆசையைப்
பூர்த்தி செய்து வைக்கப் போகிறார்

அம்மி நகர்ந்தது!

பட்டாபி சீத்தா ராமையா போன்றோர்
அன்னார் பார்வையில் அடிக்கடி படுகிறார்!
சர்வே பள்ளி இராதா கிருட்டிணன்,
இருந்திடும் போது எதுநட வாது?
நிலைமை அறிந்து நேரு நகர்ந்துள்ளார்,
வடமும் அடியும், இன்றேல்,
தேரும், அம்மியும், தானே நகருமோ?

புதுக்கோட்டை இலக்கியமன்றத்தில்

ஆராய்ந்து அறிவிப்பவன்

எந்தப் பொருளையும் நன்கு ஆய்ந்து
தொகுத்து, வகுத்து, முறைமைப் படுத்தி,
வெளியிடும் பண்பில் மிகவும் சிறந்தவர்
தரணி போற்றும் தமிழர் ஆவர்!

வள்ளுவர் உரைக்கிறார்

பாரினில் இன்பம் பலவ கைப்படும்!
இலக்கிய இன்பம் இவற்றுளே ஒருவகை.
இன்பம் என்பது இதுதான்—என்பது
முடிவு கட்டிட முடியா விவாதம்.
ஆயினும் இந்த அரும்பொருள் குறித்து,
அறனெனப் பட்டதே இன்பம்—என்று
நமது வள்ளுவர் நவில்கிறார் குறளில்.

தமிழிசைப் போர்?

செந்தமிழ் நாட்டில் சிலஆண்டு கட்குமுன்
தமிழிசை குறித்துத் தர்க்கம் நடந்தது!
இங்ஙிலை வேறு எந்த நாட்டிலும்
இல்லாத ஒன்று. இதுபோல், பிரச்சினை
ஏற்பட்ட தாக எங்கேனு முண்டா?
என்று கேட்கிறேன் இங்குள உங்களை!

தமிழன் இவன் தான்!

தமிழன் என்பவன் தன்மொழி இசையை
வெறுக்க மாட்டான்; வெறுக்கவே மாட்டான்!
தமிழையும், தமிழ்ப்பண் தந்திடும் சுவையையும்,
தடுத்து மறுப்பவன் தமிழனா? அல்லன்!
மதுரத் தமிழ்மொழி வளர்வதற் காகக்
கழகம் அமைக்கப் படுவதைக் காண்கிறோம்.
வேறுஎந் நாட்டிலும் இலாத,
நெஞ்சை வருத்தும் நிகழ்ச்சி யாகும்இது"

ஃ ஃ ஃ

புதுக்கோட் டைஎனும் புகழ்நகர் தன்னில்,
பத்தொன் பதிரண்டு ஐம்பத் தாறில்
திருக்குறள் கழகச் சார்பில் நடைபெற்ற
இலக்கியக் கூட்டம் ஒன்றில், திருச்சி
கி. ஆ. பெ, விசுவ நாதன்
உரையாற்றும் போது உரைத்தார் இவ்விதம்!

காங்கிரஸ் ஆட்சி, பூ அல்ல!—புலி நகம்!

இதயம்

சென்னை 9—3—56 வெள்ளி

சாயம் - - வெளுக்கிறது!

அமிர்த சரசில் நடந்த மாநாடு
சென்று திரும்பி சென்னையை மிதித்த,
அமைச்சர் காம ராசரைக் கேட்டோம்,
ஐயா, பச்சைத் தமிழரே! அமைச்சரே!
அமிர்த சரசில் நமதுபீர் மேட்டின்
பிரச்சினை குறித்துப் பேசி னீரா?
நியாயம் வழங்கி னரா நேரு?
அல்லது அந்த அலகாபாத் பண்டிதர்
ஆணவ முடிவை ஆதரித் தீரா?
என்று — இவ்விதம், இத்தனைக் கேள்விகள்

நாமும் கேட்டோம்!
நாடும் கேட்டது!

அதற்கு, இந்த அழகர் சொன்னார்;
தெட்சிணப் பிரதேசத் தீர்ப்பு குறித்து
மாநில மக்களின் முடிவு அறியாமல்
நானாக ஏதும் நவில்வதற் கில்லை,
என்று உரைத்து விட்டேன்—என்று!

நமது கேள்வி பீர்மேடு பற்றி
அமைச்சர் பதிலோ தெட்சிணம் குறித்து!

புதுவை தந்த புரட்சிக் கவிஞரின்
'எதிர்பா ராத முத்தம்' என்னும்
கவிதை நூலிலோர் பண்டாரம் வருகிறான்;
கொக்கு வெள்ளை,மேல் வேட்டிப்பண் டாரந்
தன்னைக், கதையில் வருவோன், கண்டு
பூங்கோதை நலமா? என்று கேட்டால்,
பொன்முடி, கடையில் அல்லவா இருக்கிறான்,
என்று உளரப்பான், அவனைப் போல,
பதில்பகர்ந் தார்சென்ற பதினேழி லேஇவர்!

செவிட்டு மனிதர் சொல்லலாம் இவ்விதம்;
கேட்கும் காதினர்க்கு அழகா குமாஇது?

பின்னர் இதுபற்றிப் பேச்சு இல்லை.
ஆனால், நிதியமைச்சர் ஆரம் பித்துளார்,
காம ராசர் பேச வில்லை,
கனம்நிதி அமைச்சர் பேசிவ ருகின்றார்!
தலைஇ ருந்திட வால்ஆடு கின்றது!
ஆடுதல் சரியா? அவ்விதம் ஆடி,
விடக்கூ டியவரா விருதை மனிதர்!
காம ராசர்தன் கருத்தை உரித்துப்
பேச வைக்கிறார், பேசா மல்இவர்;
என்பது தானே, இதற்கு உட்பொருள்!
தூங்கும் மனிதரின் தொடையி லேதான்
கயிறு திரிக்கலாம்! ஆனால் இங்கு
அரசியல் தூக்கம் யாருக்கு மில்லை,
இதனை அமைச்சர்கள் இன்றுணர்ந் திருந்தால்,
தமிழரை மயக்கிட இந்த,
அரிச்சுவடித் தந்திரம் ஆரம்பிப்பரோ?

★

★ புராணலோகப் பத்தினி

எந்தத் தேவரை விரும்பிடினும்—பெண்ணே
இந்தமந் திரத்தை நீசெபித்தால்—உடன்
வந்துஉன் செவ்விதழ் நீர்குடிப்பார்—அவர்
வடிவுபோ லேகுழந் தைகொடுப்பார்!—என்று
தொந்தி முனிவன் துருவாசன்—குந்தி
தேவியி டங்கூறிச் சென்ற பின்னர்—பல
அந்திப் பொழுதுகள்; வெள்ளிஇர—வுகள்
ஆகா யவீதியில் தேய்ந்தனவாம்!

சூரியன் மேல்மன மோகமுற்று—இளஞ்
சுந்தரி மந்திரம் உச்சரித்தாள்—அந்த
ஆரிய வாலிபன்; தேவமகன்—அவள்
அண்டையி லேவந்து நின்றனனும்—அவன்
வாரித் தழுவிடப் போகையிலே—அந்த
மல்லிகை மொட்டு மருண்டபடி—உங்கள்
கோரிக் கையைநி றைவேற்றுதற்கு—நான்
கொம்புப் பழமல்ல; பிஞ்சுஎன்றாள்!

கன்னி கன்னிஎன்று ஓடினளாம்—வந்த
காம இளைஞன் அவளிடத்தில்—அடி,
என்ன அதனாலே! வாழையின்காய்—வேம்பு
இலையால் கனிந்திடப் பார்த்திலையோ—சிறு
புன்னை அரும்பே! புதுக்கரும்பே!—என்று
பூத்திட வைத்தனன்! பூரித்தனள்—பின்னர்
கன்னன் எனுங்குழந் தைதனை அங்—கவள்
கதிரோன் உதவியால் பெற்றனளாம்!

சுற்றத்தார் மற்றவர் பட்சிப்ப—றவைகள்
தூங்கும் பின்பாதி இரவினிலே—உயர்
கற்பு இழந்திட் டகுந்திதேவி—பெற்ற
கன்னனைப் போழைத னில்மறைத்தே—உடல்
சற்று நடுங்க, இதழ்துடிக்க—தாயின்
சஞ்சலத் தோடதை நீரில்விட்டாள்—தெங்கின்
நெற்று மிதப்பது போலந்தப்பே—ழைதண்
ணீரில் அசைந்து மிதந்ததுவே!

அன்னம் பருவம் அடைந்தடவுன்—பாண்டு
அரசன் அவளைம ணந்துகொண்டான்—அதன்
பின்னர், வனந்தனில்; மானுருவில்—முனி
பெண்மா னொடுபோ கம்செய்வதனை—கண்டு
மன்னவன் அம்பினை எய்தனனும்—பட்டு
மாமுனி மாண்டிடும் நேரத்திலே—அடே!
என்னைப் போல்பெண் ணைச்சுகிக்கையில்—நீயும்
இறந்திடு வாயென் றுரைத்தனனும்!

அந்தி பொருத்தும் இரவினிலே—காதல்
ஆசை மயக்கம் தினமடைந்து—தேவி
குந்தியை வந்துத் தொடுவானும்—இதழ்
கொஞ்சி வெளிச்சுவை காண்பானும்—அங்கு
சந்தனப் பூச்சு நடந்திடுமாம்—ஆனால்
சம்போ கம்மட்டும் நடவாதாம்—தினம்
இந்தவி தமாக நாள் கழித்தான்—உடல்
இச்சை தணிக்காமல் அச்சத்தினால்!

செல்வமிருந் தும்; செல் வாக்கிருந்தும்—பல
தேசத்து வேந்தரின் வாழ்த்திருந்தும்—கொடி
முல்லைப்பூ வாயைத் திறந்திருந்தும்—வந்து
மொய்க்கும் வண்டினுப் பந்தமிருந்தும்—கட்டி
வெல்லம்சு வைத்திட நாக்கிருந்தும்—மஞ்சம்
மீது குளிரும் நிலையிருந்தும்—இன்னும்
எல்லா மிருந்துங்குந் திதேவிக்கு—அங்கு,
இரும்பு சிவக்க நெருப்புஇல்லை!

சித்திரம் போன்ற எழிலுடையாள்—தோட்டச்
செவ்வாழைக் தண்டுத் தொடையுடையாள்—தினம்
முத்தங் கள்பெற்று இனித்தனள் ஆ—யினும்
முற்றுப்பெ றாதநூல் போலிருந்தாள்—நன்கு
தித்தித்தி டும் பசுப் பாலின் நுரை—தனைத்
தின்றால் முழுப்பசி தீர்ந்திடுமா?—இதை
நித்தம் நினைத்தனள், நங்கையவள்—அவன்,
நெஞ்சும் நினைக்க மறந்ததில்லை!

குந்தி தேவி

பாவி கொடுதிட்ட சாபத்தினுல்—ராஜ
பத்தினி யே! இதழ் முத்தத்தொடு—தினம்
ஆவி கழிக்கிறேன் மாதுளையே!—நீயும்
அன்றுடம் ஏங்குருய் பொற்சிலையே!—அடி
கூவுங் கருங்குயி லே!முத்தி பெற்—றிட
குழந்தை வேண்டாமோடி! மயிலே!—என
பூவின் மணம்வரும் அந்தியில்,குந்—தியைப்
பொன்முடி யோன் பார்த்துக் கேட்டனனும்!

கன்னிப் பருவத்தி லே ஒரு நாள்—முதல்
காம அனுபவம் கண்ட அவள்—அந்த
மன்னவன் இவ்வா றுரைத்திடவே—"சேலை
மாதுளை" யோசனை செய்யலுற்ருள்—பின்னர்
அன்னவ னைநோக்கி "மன்னவனே—என்று
அல்லிம லர்வாய் திறக்கலுற்ருள்—தன்
சின்ன வயதினில் மாமுனிவன்—தந்த
தெய்வ வரத்தை விரித்துரைத்தாள்!

பெற்ற வரத்தினுல்; தேவர்களால்பிள்ளை—அங்கு
பெற்றிட லாம்வேந் தே!என்றுஅவள்—அங்கு
முற்றும் உரைத்தனள், கன்னன்பிறப்—பினை
மூடி மறைத்தனள் மன்னனிடம்—ஆளும்,
கொற்றவ ரேநீங்கள்; சம்மதித்தாள்—இன்றே
கொஞ்சும் குழந்தை நான் பெற்றிடுவேன்—என,
சற்றும் தயங்காது, மானமின்றி—சரி
சம்மதித் தேனென்று, வாக்களித்தான்!

அன்னப் பறவையே! வெண்பிறையே!—ஒளி
ஆயுதம் தூங்கிடும் வாள்உறையே!—அடி
என்னுல் தடைபடும் காரியத்தை—நீ
எவரைக் கலந்தே னும்பூர்த்திசெய்க—இனி
உன்னிட் டம்போல்நட, யாரேனும்—கரு
உண்டாக் கினுல்போதும் உன்வயிற்றில்—இதைச்
சின்னத் தனமென்பர் வையத்தினர்—இது
தேவை பெருக்கிடும் காம விழா!
சேம விசாரணை செய்வதன்றி—மலர்த்
தேனை உறுஞ்சிட அச்சப் படும்—அந்த,
ஆமை அரசனிவ் வாறுரைக்க—கேட்டு
ஆனந்தப் பட்டனள்! நெஞ்சுக்குள்ளே!—அன்றே
ஊமை இரவில்! தனியறையில்—ஒளி,
ஒட்டிக் கிடந்த பிறைப் பொழுதில்—பெருங்,
காமக் கொதிப்போ டெமதருமன்—வரக்,
கண்மூ டிமந்திரத் தைசெபித்தாள்!

எருமையின் மீதுச வாரி செயும்—அந்த
எமதரு மன்அங்கு தோன்றிநின்ருன்—சங்கு
அரும்புச் சிரிப்பொடு அன்னவனை—அந்த
அன்னப் பறவை நெருங்கலுற்ருள்—அவள்
கரும்பு நினைப்பை அறிந்தவுடன்—எமன்
காயப் படுத்தினன் கன்னத்தினை—மங்கை
விரும்பிச் சுவைத்தனள்! மஞ்சத்திலே—மலை
மீது படிந்தது வெண்ணிலவு!



கோடைப் பருவக் குயில் பறவை—அங்குக்
கூவி செவிச்சுவை தந்தபடி—உடல்
ஆடை நழுவிட நின்றனளாம்—முத்து
ஆரம் அழுந்தத் தழுவினனும்—புது,
ஒடுவெ டித்தவி ளாங்கனியை—எமன்
உண்ணத் தலைப்படும் நேரத்திலே—வெள்ளைத்
தோடு அணிந்தவள், அன்னவன்மேல்—விரல்
தொட்ட பசைபோல ஒட்டிக் கொண்டாள்!

முத்தம்—கலவி—புரிவதற்கு—அவள்
முன்பே தன்சொந்தக் கணவனிடம்—தனி
உத்தரவு பெற்று விட்டதனுல்—அவள்
உள்ளத் திலேஅச்சம் கொள்ளவில்லை—மீண்டும்
தைத்த இலைபோல ஆயிடுவோம்—எனத்
தையல், எமனிடம் கூறலுற்ருள்—"இனி
பத்தினி, புத்திரன் பெற்றிடுவாள்—என்று,
பார்த்திபன் கேட்டு மனமகிழ்ந்தான்!

எள்ளும் அரிசியும் போலக் கலந்—தங்
கிருந்து மகிழ்ந்து எழுந்திருந்தார்—குந்தி;
பிள்ளைக் கருவுற்ருள், அன்னவனுல்—பின்னர்
பெற்ருள் உதிட்டிரன் என்பவனை—காமப்
பள்ளக் கிழங் கெனும் மைந்தனுக்குப்—பாண்டு
பாடுப டாமலே தந்தையானுன்—எமன்
அள்ளிப் புசித்ததால் தன்வயிற்றின்—முதல்
அறுவடை தந்தனள், பாண்டுவிடம்!

மாதங்கள் நாலைந்து தாண்டிநடந்—திட
மன்னவன் குந்தி தனைநோக்கி—அடி
சாதம் படைக்கும் தமிழகத்தில்—பல
சாதி படைத்த இனத்தினளே—ராஜ
வீதி வலம்வரும் பொன்ரதமே—பெண்ணே!
மீண்டுமோர் குழந்தை வேண்டுமடி—என்று
பாதிநி லாநெற்றி பெற்றவளை—மன்னன்
பாண்டு பலமுறை வேண்டிக் கொண்டான்.

வாயுப கவானை மந்திரத்தால்—இங்கு,
'வாரும்' எனைச்சுவை பாரும் என்று—சண்டை
ஆயுதப் பார்வை உடையவள்—பாரத
அற்புதப் பத்தினி கூப்பிடவே—உடன்
வாயு பிரசன்ன மாயினனும்—குந்தி
வந்தன ளாம் உடல் தந்தனளாம்—பின்னர்
தாயின் தகுதி அடைந்தனளாம்—வாயு
தயவினுல் பீமனைப் பெற்றனளாம்!

மற்றும் ஒருமகன் வேண்டுமெனும்—பாண்டு
மன்னன் விருப்பம் தெரிந்தவுடன்—அவள்
அற்புத மந்திரத் தாலிந்திரன்—தனை
அந்தப் பொழுதே வரவழைத்தாள்—அவன்
நெற்றி பொருந்தத் தழுவினனும்—எச்சில்
நீரால் உதட்டைக் கழுவினளாம்—குந்தி
பெற்ரு ளாம்அர்ச்சுனன் என்பவனை—அந்தப்
பிள்ளைக்கும் பாண்டுதான், பொய்த் தகப்பன்!

ஆடு மலையேறி மேய்ந்திடினும்—குட்டி
ஆட்டுஇ டையனுக்கே, அதுபோல்—தன்
வீடுநு ழைந்தவர் பெற்றகுழந்—தைக்கும்
விலாசத் தகப்பனன் ருேபாண்டு!—நெய்த
ஆடைஎ தற்காக மூடுதற்கு—குந்தி
அம்மையைப் போல் கற்பு விற்பவர்க்கு!—என்ன
நாடக பாரதம் பார்த்தீரா—இந்த
நாற்றத் தைக்கும்பியில் சேர்ப்பீரா?

—சுரதா.

அரங்கேற்றம்!

அணங்கு - குயில் மயில் அனைத்தும் நீ

தென்னர்க்குத் தெவிட்டாத
தேன்கலந்த அமுதே!
திருவேங்கடக் குமரிக்கட
விடைவளருங் கிளியே!
மன்னவர்தம் மடிவளர்ந்த
மாண்புமிகு மகளே!
மடவாரின் முகமொத்த
மாநிலத்தின் மதியே!
இன்னற்கு இடைநிகழும்
ஈடில்லா இசையே!
இனமொழியை ஈன்றெடுத்த
எம்மம்மே! தாயே!
தென்னர்க்கு நெறிகாட்டும்
திராவிடரின் மூச்சே!
தெளிதேனே! தீங்கரும்பே!
தமிழ்த்தாயே வாழி!
எடெழுதாக் கவியே!
எழுத்தறிவின் ஊற்றே!
எண்ணோடு எழுத்தாய்
இருகண்ணின் பாவாய்!
பாடுவார்க் கெளிதாகப்
பலனீயும் வள்ளால்!
பண்பட்ட நிலனே!
பாரிநிகர் மாரி!
நாடெல்லாம் மணக்கும்
சங்கத்தின் மலரே!
நலிந்தோர்க் குணர்வூட்டும்
நத்தாத மருந்தே!
தேடுவார்க் கரிதாய
குவையான நிதியே!
தீஞ்சுளையே! செங்கனியே!
தமிழ்த்தாயே வாழி!

—சோ. இராசன், தஞ்சை.

●

மடமை யன்றோ!

பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பு ஒவ்வா செய்தொழில் அதனில்
என்றே குறள்நெறி எழுந்தஎம் நாட்டில்
நன்றே வாழ வகைகா ணுது
ஆடு மேய்த்த ஆரியர் வந்து
கேடு செய்ய கொடுமதி கொண்டு
நான்கு சாதி நம்மிடை பிரித்தனர்!
நான்கு அதனில் நாங்களே உயர்ந்தவர்
மற்றவர் யாவரும் மறவ ராயினும்
பிறப்பால் கடையர் பிரமன் செயலிது
அறிவீர் என்றே அறைந்தனர் நம்மிடம்
சிறுமதி கொண்ட சிறுகூட் டத்தினர்
ஒன்றே குலம் ஒருவனே தேவன்
என்றே கொண்டு உயர்ந்த நம்மிடை
பற்பல வருணம் பற்பல கடவுள்
பற்பல சடங்கு பற்பல வினைகள்
சமைத்தனர் பார்ப்பார்! சுமத்தினர் இன்னல்
அமைதியைக் குலைக்கும் யாவும் புரிந்தனர்!
வில்லுக் கஞ்சா வீரா தம்மிடம்
புல்லைக் காட்டி பேடி யாக்கினர்
அண்டிப் பிழைக்கும் ஆரியர் தமக்கு
மண்டி யிட்டிடல் மடமை யன்றோ?

—பார்த்திபன், அணவை.

●

காவியம் கண்டேன் நல்ல
கவிஞரின் முயற்சி கண்டேன்
ஓவியர், கதைகள் கண்டேன்
உவகையென் மனதில் கண்டேன்
காவியம் வாழ்க! வாழ்க!
என்று நான் வாழ்த்துகின்றேன்.

—சு. நாகராசன், நாஞ்சில் மாவட்டம்.

எழுந்து வா!

பண்டைமதிப்புதனைக் கண்டோர் கொதித்தெழவே
பாடல் இயற்றி வருவாய்-ஆளும்
மண்டை கொழுத்தவரை மாய்த்துத் தலைநிமிரும்
மட்டும் உழைப்பு தருவாய்

அண்டிப் பிழைத்தவர்கள் உண்டு கொழுத்துதினம்
ஆளல் தொலைத்து விடுவாய்-கற்
கண்டின தமிழுயரக் கண்டோம் எனுநிலையைக்
காணப் பறந்து நடவாய்

தட்டுத் தடங்கலிலைத் தண்ணீர்ப் பொழிவெனவே
தம்பிநற் பேச்சு பயில்வாய்-பெரும்
பட்டைப் பழையபெரும் பஞ்சாங்கம் வைதீகர்
பாங்காய்க் கிடந்து துயில்வார்

தட்டி எழுப்புஉரை! கொட்டி முழக்குகதை
தன்னிற் புலமை அடைவாய்-கதை
கட்டி அளந்துடணம் தட்டும் பெரியவரின்
கொட்டம் ஒடுக்க எழுவாய்

தீங்கு தொலைந்துநலம் தேங்கித் திளைத்ததென
தீமை தொலைத்து விடுவாய்-இங்கு
ஓங்கு நரிகளுயிர் ஓடிப் பறக்கவுடன்
ஓடி எழுந்து வருவாய்

—பாவநாசம் பொன்னிவளவன்

●

தமிழ்ப்புதல்வர் யாரோ?

இமிழ்கடல்சூழ் தரணியெலாம்
புகழ வாழ்ந்த
எழில்மிகுந்த தமிழகத்தை
அழிக்க எண்ணி
இமைகொட்டா விண்ணவர்வாழ்
உலகை நீத்தே
இவண்வந்தோம் எனச்செப்பி
நாளும் எய்த்தார்க்(கு)
அவிநல்கி உறைநல்கி
வந்த தாலே
அமிழ்ந்திட்டார் புவியாண்டார்
அந்தோ! இன்னே
அமிழ்தான தமிழ்வாழ
உழைப்பார் யாரோ
அவரெல்லாம் தமிழ்ப்புதல்வர்
ஆவார் மெய்யே!

வான்சுரர்தாம் மொழிவதெங்கள்
மொழியே என்றும்
வளம்மிகுந்த மொழியெங்கள்
மொழியே என்றும்
தேன்சுரக்கும் திருக்கோயில்
கடவுட் கெல்லாம்
சிறப்புடனே அருச்சனைதான்
பண்ணத் தக்க
மேன்மைமிகு மொழியெங்கள்
மொழியே என்றும்
மிகசூழ்ச்சி வலைவீசும்
வடவர் போற்றும்
ஆன்றலிலாக் கொடும்மொழியைத்
தொலைப்பார் யாரோ
அவரெல்லாம் தமிழ்ப்புதல்வர்
ஆவார் மெய்யே!

அழல்போலும் உளமுடையார்;
அறிந்த சூழ்ச்சி
அனைத்தையுமே தமிழகத்தில்
செலுத்தி வாழும்
சழக்குமிகு வடநாட்டார்
மீண்டும் மீண்டும்
தமிழழிய 'இத்தேசம்
ஏகம்' என்று
குழவிக்கு மருந்தூட்டல்
போல எய்த்துக்
கொணர்கின்றார் இந்திதனை
இன்பம் நல்கா
அழகற்ற மாதவளை
வெறுப்பார் யாரோ
அவரெல்லாம் தமிழ்ப் புதல்வர்
ஆவார் மெய்யே!

—இரா. சண்முகம் பண்ணைக்காடு.

நமது மேடை

கோவையில் அண்ணா

18—3—56-ல்

கோவை நகர தி. மு. க. நிதிக்காக
ஞாயிறு அன்று நமது
அண்ணா சிறப்புரை ஆற்றிடு வாரே!

●

அன்பளிப்பு!

தஞ்சைமா வட்டந் தன்னைச் சேர்ந்த,
பாவின் சுவையுணர் கீவளூ ரில்வாழ்,
அன்பு முகம்எனும் அருமைத் தோழர்,
கவிதைகள் வழங்கும் 'காவியம்' இதழின்
வளர்ச்சிக் காக, மலர்ந்த நினைப்பொடு
இரண்டு ரூபாய் அன்பளிப்பு
அளித்துளார் மிக்க நன்றி அவர்க்கே!

—பொறுப்பாளர்.

●

திருக்குறளாருக்குப் பொன்னாடை

தித்திக்கும் மாம்பழச் சேலந் தன்னில்
திருக்குறள் முனிசாமி எம். பி. அவர்கட்கு,
இரத்தின சாமி எம் எல். ஏ அவர்களால்,
பொன்னாடை போர்த்தப் பட்டது. அந்த,
மதிப்பு விழாவில், 'மறைகா வலர்!''
பட்டமும் வழங்கப் பட்டது, அவர்க்கே

அர்த்தாலுக்குப் பிறகு!

10-3-56ல்

சனிநாள் மாலை, தங்கக் கதிரோன்
மேற்கு விண்ணில் மிதந்திடும் பொழுதில்,

நுங்கம்பாக்கம்
இரயிலடிக் கருகில்
சிறப்பு மிகுந்த
தி.மு.க. திடலில்

அண்ணா
நெடுஞ்செழியன்
நடராசன்
மதியழகன்
கருணாநிதி
கண்ணதாசன்
கல்யாணசுந்தரம்
சத்தியவாணிமுத்து
அலமேலு—அப்பாதுரை

இத்தனை பேரும் தித்திக்கப் பேசுவர்.

இசைச்செல்வி ஜி.கஸ் தூரி; குடந்தை
சீனி வாசன், இருவரும் .
இன்னிசை வழங்குவர் தென்மொழிக்
தமிழிலே!

ஆசிரியரும், வெளியிடுபவரும்:—சுரதா, 12, படவேட்டம்மன் கோவில் தெரு, சென்னை-12. அச்சிட்டவர்:—D. ரத்தினவேலு, ஸ்ரீ பாரதி பிரஸ், 19, ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெரு, சூளை, சென்னை-7